# 2026 தேர்தல் களமும் ஆரிய – திராவிடப் போரின் மற்றொரு களம்தான்!

# டெல்லியின் ஆதிக்கத்துக்கு, தமிழ்நாடு என்றைக்கும் தலைகுனியாது!

## காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மொழிப் போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் – கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை!

**காஞ்சிபுரம், ஜன.26-**

**கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25-01-2026) மாலை, காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு எழுச்சியுரை ஆற்றுகையில், "2026 தேர்தல் களமும், ஆரிய - திராவிடப் போரின் மற்றொரு களம்தான்!" என்றும், "டெல்லியின் ஆதிக்கத்துக்கு தமிழ்நாடு என்றைக்கும் தலைகுனியாது" என்றும் குறிப்பிட்டார்.**

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

"சேனை ஒன்று தேவை! செந்தமிழைக் காப்பதற்குச் சேனை ஒன்று தேவை! பெருஞ் சேனை ஒன்று தேவை" என்று தமிழைக் காக்க முழக்கம் கேட்டதும், "ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள் - நீ தேடிவந்த கோழையுள்ள நாடிதல்லவே!" என்று தமிழ்நாட்டின் வீதிகளில் இறங்கிப் போராடி, தங்களுடைய உயிரையும் தந்து, தாய்த்தமிழைக் காத்து, நாம் அனைவரும் இன்னும் தமிழராய்த் தன்மான உணர்வுடன் தலைநிமிர்ந்து நடைபோடக் காரணமான, மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம்!

### மொழிப்போர் மறவர்களுக்கு வீர வணக்கம்!

"வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்!", "உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு" என்று வாழ்ந்து மறைந்த மொழிப்போர் மறவர்களுக்கு வீரவணக்கம்!

திராவிட இயக்கத் தீரர்களே! நீங்கள் உருவாக்கிக் கொடுத்த நிலத்தில்தான் நாங்கள் வாழ்கிறோம்! மொழிப்போர் வீரர்களே! உங்கள் மூச்சுக் காற்றுதான் இப்போதும் எங்களை இயக்கிக் கொண்டிருக்கிறது! தமிழ்த்தாயின் தியாகப் பிள்ளைகளே! தலைப் பிள்ளைகளே! உங்களை வணங்குகிறேன்!

எழுச்சியோடும் உணர்ச்சியோடும் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றுள்ள உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்!

### பேரறிஞர் அண்ணாவைத் தந்த காஞ்சிக்கு வந்திருக்கிறேன்!

ஆண்டுதோறும் இந்த ஜனவரி 25-ஆம் நாளை மொழிப்போர்த் தியாகிகளை நினைவுகூரும் வகையில் வீரவணக்க நாளாகக் கடைப்பிடித்துக் கொண்டு வருகிறோம்!

இன்று, தமிழ்நாடு முழுவதும் மொழிப் போர்த் தியாகிகள் கூட்டம் இதேபோன்று நடந்து கொண்டிருக்கிறது! நான் காஞ்சி மாநகருக்கு வந்திருக்கிறேன். சாதாரண காஞ்சிக்கா வந்திருக்கிறேன்? பேரறிஞர் பெருந்தகை அண்ணாவைத் தந்த காஞ்சிக்கு வந்திருக்கிறேன்! நம்மை எல்லாம் ஆளாக்கிய அன்பின் தெய்வம் அண்ணாவின் காஞ்சிக்கு வந்திருக்கிறேன்! அஞ்சி அஞ்சி வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தைப் பார்த்து, "ஏ தாழ்ந்த தமிழகமே!" என்று கேட்டு, இன உணர்வை ஏற்படுத்திய நம் அண்ணன் பிறந்து வளர்ந்த இந்தக் காஞ்சி மண்ணுக்கு வந்திருக்கிறேன்!

### தாய்க்குப் பெயர் சூட்டிய தனயன், பேரறிஞர் அண்ணா!

வரலாற்றில் எத்தனையோ தலைவர்கள் உண்டு. அதில், அண்ணாவைப் பார்த்தால், எனக்கே சில நேரம் பொறாமையாக இருக்கும்! ஏன் தெரியுமா? பெரியாரைப் போன்ற குருவும் - கலைஞரைப் போன்ற சிஷ்யனும் கிடைத்த ஒரே தலைவர் பேரறிஞர் அண்ணாதான்! எல்லாத் தாயும், தன்னுடைய பிள்ளைக்குப் பெயர் வைப்பார்கள். ஆனால், நம் தாய்நாட்டுக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் வைத்த தலைமகன் பேரறிஞர் அண்ணாதான்! அப்படிப்பட்ட அண்ணாவின் ஊரில், அவர் உருவாக்கிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக, இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் பேசுவதே, எனக்குக் கிடைத்த பெருமை.

மிக மிக உணர்ச்சிமயமான மனநிலையில் இங்கு உங்கள் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன்! என்னுடைய அரசியல் பயணத்துக்கு எத்தனையோ உந்து சக்திகள் இருக்கலாம். ஆனால், அனைத்திற்கும் சிகரம் வைத்ததுபோன்று இருந்த உந்துசக்தி எது என்று கேட்டால், அது இந்தக் காஞ்சி நகரம் தான்.

### அண்ணா சுடரேந்தி தொடங்கிய ஓட்டம், இப்போது வரை ஓயவில்லை!

என்னுடைய 13 வயதிலேயே 'கோபாலபுரம் இளைஞர் தி.மு.க.' அமைப்பை ஏற்படுத்திப் பல நிகழ்ச்சிகளை நான் நடத்திக் கொண்டு இருந்தது அனைவருக்கும் தெரிந்ததுதான்! அந்த வகையில், 1971-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா துயில் கொண்டிருக்கும் நினைவிடத்தில், மலர்வளையம் வைத்து வணங்கி, அங்கிருந்து, அண்ணா ஜோதியை கையில் ஏந்தி, தொடர் ஓட்டமாகப் புறப்பட்டு, காஞ்சிபுரத்தில் நடந்து கொண்டு இருந்த தி.மு.க. மாநாட்டு மேடையில் தலைவர் கலைஞர் கரத்தில் கொண்டு வந்து நான் அண்ணா ஜோதியை ஒப்படைத்தேன். அப்போது, நம்முடைய தலைவர் கலைஞருக்குப் பக்கத்தில் அன்றைய பொதுச்செயலாளர் நாவலரும், கழகப் பொருளாளர் எம்.ஜி.ஆர். அவர்களும் இருந்தார்கள். கையில் அண்ணா சுடரேந்தி அன்று தொடங்கிய ஓட்டம், இப்போது வரை ஓயவில்லை! அதே காஞ்சிக்குத்தான், இன்றைக்கு மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்த வந்திருக்கிறேன்.

சில நாட்களுக்கு முன்னர், சென்னை வந்த ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்கள், நமக்கு மொழிப்பாடம் எடுத்துவிட்டுச் சென்றிருக்கிறார். எல்.கே.ஜி. பையன், பேராசிரியருக்குப் பாடம் எடுப்பது போன்று இருக்கிறது அவருடைய செயல்பாடு!

### பணத்தையும், அதிகாரத்தையும் காட்டி மிரட்டினால் பணிந்து விடுவோமா?

தமிழ்நாட்டிற்குள் இந்தித் திணிப்பை அனுமதிக்க மாட்டோம் என்று சொன்ன காரணத்துக்காக, நமக்குத் தர வேண்டிய 3 ஆயிரத்து 548 கோடி ரூபாய் நிதியைத் தராமல் இருப்பவர்தான் இந்த பிரதான்! "3 ஆயிரம், 5 ஆயிரம், ஏன் பத்தாயிரம் கோடி கொடுத்தாலும், மும்மொழித் திட்டத்தை ஏற்க மாட்டோம்!" என்று சொன்னவன்தான் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். பணத்தையும், அதிகாரத்தையும் காட்டி மிரட்டினால் பணிந்து செல்ல, நாம் என்ன அடிமைகளா? அண்ணா, கலைஞர் போன்ற தமிழ்ப் போராளிகளின் பரம்பரையில் வந்தவர்கள் நாம்! அதுமட்டுமல்ல, மொழிப்போர் வீரர்களான நடராசன் - தாளமுத்து - ராசேந்திரன் போன்றவர்களின் கொள்கை உணர்ச்சி எனக்குள் ஓடிய காரணத்தினால்தான், அப்படிச் சொன்னேன்!

### உங்களால் தமிழ்நாட்டை வீழ்த்த முடியாது!


1938-இல் இருந்து இந்தித் திணிப்புக்கு எதிராக நாம் போராடிக் கொண்டிருக்கிறோம். இந்தி என்பது வெறும் மொழித் திணிப்பு மட்டுமல்ல! அது பண்பாட்டுப் படையெடுப்பு! இந்தியா முழுவதும் இந்தியின் ஆதிக்கத்துக்கு எத்தனை மொழிகள் பலியாயின? இந்தியை ஒதுக்கி, நாம் ஆங்கிலத்தைத் தொடரச் செய்ததால் தமிழ்நாடு எப்படி வளர்ந்தது என்று கடந்த ஆண்டு நான் ஒரு கடிதத் தொடர் எழுதினேன். இந்திய அளவில் அதற்கு மிகப் பெரிய வரவேற்பு கிடைத்தது. பல்வேறு மொழிபேசும் மக்கள், என்னுடைய பதிவுகளுக்குக்கீழ், தங்களுடைய மொழி இந்தியால் அழிந்தது எவ்வாறு என்று பகிர்ந்து கொண்டார்கள். அதுபோன்று தமிழ்நாட்டை அடிமைப்படுத்த வேண்டும் என்றுதான் காலந்தோறும் டெல்லி நம் மீது படையெடுத்து வருகிறார்கள்! நாம் பார்க்காத படையெடுப்பா! நீங்கள் எத்தனை முறை வந்தாலும் சரி, எத்தனை துரோகிகள், அடிமைகள், அரசியல் கோமாளிகள், கோழைகளை துணைக்கு அழைத்துக் கொண்டு வந்தாலும் சரி, உங்களால் தமிழ்நாட்டை வீழ்த்த முடியாது!

### 'டப்பா எஞ்ஜின்' தமிழ்நாட்டில் ஓடவே ஓடாது!

உறுதியுடன் சொல்கிறேன்... 'டபுள் எஞ்சின்' என்று சொல்லி வடமாநில மக்களை ஏமாற்றி, அவர்கள் வாழ்வாதாரத்தை அழிக்கும் உங்கள் 'டப்பா எஞ்சின்' தமிழ்நாட்டில் ஓடவே ஓடாது! 2021-இல் பெற்ற

தொடர்ச்சி 4– ஆம் பக்கம்



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.1.2026) காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு, உரையாற்றினார். இப்பொதுக்கூட்டத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர், மாவட்ட கழக துணைச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான க.செல்வம், கொள்கை பரப்புச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான சி.வி.எம்.பி.எழிலரசன், கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, மாநகர கழக செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி எம்.மகாலட்சுமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

## மொழிப்போர்த் தியாகிகளை நினைத்தாலே – உணர்ச்சி பொங்குகிறது!

*மொழிப்போர்த் தியாகிகளை நினைத்தாலே - அவர்களின் பெயரைச் சொன்னாலே, உணர்ச்சி பொங்குகிறது! உடல் நடுங்குகிறது!*

### தமிழ் காக்க இன்னுயிர் ஈந்த தீரர்கள் பட்டியல் இதோ!

*1938-ஆம் ஆண்டிலேயே 'தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு' முடிந்த மறுநாள் - மொழிப்போர்க் களத்தின் முதல் வீராங்கனையாகப் பெண்களை அணிதிரட்டிப் போராடினார் வீரத் தமிழன்னை தருமாம்பாள்!*

*25.01.1964-இல் தீக்குளித்து இறந்து, மொழிக்காக உயிரைக் கொடுத்த இளைஞர் கீழப்பழுவூர் சின்னச்சாமி, கழகத்தின் தொண்டர்!*

*1965-ஆம் ஆண்டு, ஜனவரி 25, சென்னை கோடம்பாக்கத்தில், சிவலிங்கம் என்ற 21 வயது இளைஞரும் தீக்குளித்தார். அவர் திராவிட முன்னேற்றக் கழக நுங்கம்பாக்கம் பகுதிப் பொருளாளர்.*

*அதற்கு மறுநாள் விருகம்பாக்கம் அரங்கநாதன் தீக்குளித்தார். அவர் ஒன்றிய அரசின் தொலைபேசித் துறை ஊழியர். தி.மு.க. தொண்டர். இந்த அரங்கநாதன் பெயரில்தான், சென்னை தியாகராயர் நகரில், 'அரங்கநாதன் சுரங்கப்பாதை' இருக்கிறது. அதை அமைத்தவர் தலைவர் கலைஞர்.*

*27.01.1965 சிதம்பரத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் வீரத் தியாகி ஆனார், அண்ணாமலைப் பல்கலைக்கழக பி.எஸ்.சி. மாணவர் சிவகங்கை ராசேந்திரன். 18 வயதே ஆன அந்த மாவீரனுக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழக வாசலில் சிலை அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சிலையைத் திறந்து வைத்தவர் தலைவர் கலைஞர்.*

*கோவை பி.எஸ்.ஜி. பொறியியல் கல்லூரி மாணவரான பீளமேடு தண்டபாணி, 1965 பிப்ரவரியில் நஞ்சுண்டு - விஷத்தை அருந்தி இறந்தார்.*

*அதே பிப்ரவரி மாதம் சத்தியமங்கலம் முத்து என்ற தி.மு.க. தொண்டர் தீக்குளித்தார்.*

*அய்யம்பாளையம் ஆசிரியர் வீரப்பன் 11.02.1965 அன்று தீக்குளித்தார். தி.மு.க.வைச் சேர்ந்த இவர், அந்தப் பகுதியில் இளைஞர் மன்றம் நடத்தியவர்.*

*கீரனூரைச் சேர்ந்த முத்து, 1965 பிப்ரவரி மாதம் நஞ்சுண்டு இறந்தார்.*

*22 வயதான விராலிமலை சண்முகம் எனும் தி.மு.க. தொண்டர் 25.02.1965 அன்று விஷத்தை அருந்தி இறந்திருக்கிறார். அவர் ஒரு மளிகைக் கடை ஊழியர். திருச்சி - பாலக்கரையில், 16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பாலத்திற்கு, கீழப்பழுவூர் சின்னச்சாமி, விராலிமலை சண்முகம் ஆகியோர் நினைவாக 'சின்னச்சாமி - சண்முகம் பாலம்' என்று பெயர் சூட்டினார் முதலமைச்சர் கலைஞர்.*



### தமிழ்த் தாயின் தலைப்பிள்ளைகள் தியாகத்தின் திருவுருவங்கள்!

*இவர்கள் அனைவருக்காகவும் மொழிப்போர்த் தியாகிகள் மணிமண்டபம் அமைத்தோம். சென்னையில் உள்ள மிக முக்கியக் கட்டடங்களில் ஒன்றுக்கு மொழிப்போர்த் தியாகிகளான தாளமுத்து - நடராசன் ஆகிய இருவர் பெயரையும் சூட்டினார், தலைவர் கலைஞர்.*

*இன்றைக்குக் காலையில் கூட, நான் நேரடியாகச் சென்று, அந்தக் கட்டடத்தில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் தாளமுத்து - நடராசன் திருவுருவச் சிலைகளைத் திறந்து வைத்துவிட்டுத்தான் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறேன். இவர்கள்தான் தமிழ்த்தாயின் தலைப்பிள்ளைகள் - தியாகத்தின் திருவுருவங்கள்! மொழியைக் காக்கப் போராடிய நம்முடைய கழகம், ஆட்சி அமைத்ததும், இருமொழிக் கொள்கைச் சட்டம் நிறைவேற்றினார் நம்முடைய ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா! இன்றைக்கு வரை யாராலும் அதைத் தொட்டுக் கூட பார்க்க முடியவில்லை!*

### யாராலும் தொட்டுப் பார்க்க முடியாத, அண்ணாவின் இரு மொழிக் கொள்கை!

*எப்படியாவது இந்தியை நம் மீது திணிக்க வேண்டும் என்றுதான் மும்மொழித் திட்டத்தை அமல்படுத்த ஒரு கும்பல் துடியாகத் துடிக்கிறது! தேசிய கல்விக் கொள்கையைக் கொண்டு வந்து, அதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதே, இந்தியைத் திணிக்கத்தான். நேரடியாகத் திணிக்க முடியவில்லை என்று, பள்ளி - பல்கலைக்கழகங்கள் மூலமாகத் திணிக்க முயற்சி செய்கிறார்கள்!*